(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 3 )

SUBJECT CODE 22 PTM 101

REG.NO:

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : டிசம்பர் – 2022

எம்.ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 50

முதல் பருவம் நேரம் : 3 மணி

## இக்கால இலக்கியம்

### பகுதி – அ (10 x 1 = 10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (K1)**

1. ஆட்டங்கள் ஆடியும் பாட்டுக்கள் பாடியும் ஆறுதல் செய்தவர் யார்?
   அ ) முருகன் ஆ) கண்ணன் இ) குழந்தை ஈ) சிவன்
2. நவீனத் தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பு யாருடையது ? .
   அ) சா. கந்தசாமி ஆ) அசோகமித்திரன்
   இ) ஜெயகாந்தன் ஈ) நகுலன்
3. தேடல் என்பது எதனைச் சுட்டுகிறது? .
   அ) காப்பியம் ஆ) நாடகம் இ) நாவல் ஈ) சிறுகதை
4. பாண்டியன் பரிசு எனும் நூலை எழுதியவர் யார்?
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) நாமக்கல் கவிஞர்
5. நம் வாழ்க்கை நம் கையில் என்று கூறியவர் யார்?
   அ ) மகாலிங்கம் ஆ) சுகி சிவம் இ) பாரதியார் ஈ) கல்கி

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. ஆகாயத்திற்கு அடுத்த வீடு என்னும் நூலில் உள்ள கவிதை தலைப்புகள் இரண்டினைக் கூறு?
7. நவீனச் சிறுகதைகள் கூறுவது என்ன?
8. பார்த்திபன் கனவு புதினத்தில் கூறப்படுவது என்ன?
9. பாண்டியன் பரிசு என்னும் நாடகத்தில் இடம்பெறும் கதாப் பாத்திரங்களின் பெயரினைக் குறிப்பிடுக?
10. அருட்செல்வர் நா. மகாலிங்கத்தின் கருத்தினை எழுதுக?

(த.பி.பா.)

**பகுதி – ஆ ( 5 x 3 = 15 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) நாமக்கல் கவிஞரின் தமிழ்ப் பற்றினை விவரி.

( அல்லது )

ஆ ) இலையுதிர் நிர்வாணங்கள் கவிதையில் காணலாகும் சமூகச் சிந்தனைகளைக் கூறுக.

12. அ) பொன்னீஸ்வரனின் மன வேதனையை விளக்குக.

( அல்லது )

ஆ) ஜெயகாந்தன் கதையில் வரும் சீசரின் பண்பு நலனைக் கூறுக.

13. அ) தேடல் நாவலின் கதைக் கரு பற்றி எழுதுக.

( அல்லது )

ஆ) பார்த்திபன் கனவு எனும் புதினத்தில் கூறுவது என்ன?

14. அ ) யாருக்கும் வெட்கமில்லை எனும் நாடகத்தில் பிரமிளாவின் பாத்திரப் பண்பை எழுதுக.

( அல்லது )

ஆ ) பாண்டியன் பரிசு நாடகத்தில் காணப்படும் வேழநாட்டுப் படைக் குறித்து விவரி.

15. அ) அழுகிய சமூகத்தில் அழகிய மனிதர்களைப் பற்றி சுகி சிவம் கூறும் கருத்தினை விளக்குக.

( அல்லது )

ஆ) மும்மொழித்திட்டம் குறித்து அருட்செல்வர் நா.மகாலிங்கம் கருதுவனவற்றை விளக்குக.

**(த.பி.பா.)**

**பகுதி – இ ( 5 x 5 = 25 மதிப்பெண்கள் )**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4 & K5)**

16. அ ) மேத்தா கவிதையில் காணலாகும் சமூகச் சிந்தனைகளை விளக்குக.

( அல்லது )

ஆ ) கார்த்திகாவின் மனக் கருத்தினை அவரது கவிதை வழி நிறுவுக.

17. அ) மைலாஞ்சியும் மதிவதனியும் சிறுகதையில் காணப்படும் சமூகச்சிக்கல்களை விவரிக்க.

( அல்லது )

ஆ ) அப்பாவின் பள்ளிக்கூடம் எனும் சிறுகதையில் பிள்ளைகளின் மனப்பாங்கை எடுத்துரைக்க.

18. அ) சோழப் பேரரசுக்கு ஏற்பட்ட சிக்கல்களை கல்கியின் புதினத்தைக் கொண்டு புலப்படுத்துக.

( அல்லது )

ஆ) தேடல் நாவலின் தலைப்புப் பொருத்தத்தை விவரிக்க.

19. அ ) பாண்டியன் பரிசு நாடகத்தில் அன்னத்தின் மன நிலையை விளக்குக.

( அல்லது )

ஆ) யாருக்கும் வெட்கமில்லை எனும் நாடகத்தில் காணலாகும் சமூக அவலங்களை எடுத்துரைக்க.

20. அ ) எண்ணத்தின் செயல்பாடு குறித்து சுகி சிவம் கூறும் கருத்தினை எழுதுக.

( அல்லது )

ஆ) நா மகாலிங்கம் கட்டுரையில் வெளிப்படும் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைகளைத் தொகுத்தெழுதுக.

*******